19 JUN 2000

பக்கங்கள் நான்கு

# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5-00

சங்கு: வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி ஞாயிற்றுக்கிழமை ( 18 - 06 - 2000 ) VALAMPURI ஒலி: 181

★ இனப்பிரச்சினைத் தீர்வின் ஒரு பகுதியாக

# வடக்கு - கிழக்கை இணைப்பதற்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு!

## தமிழ்க் கட்சிகள் எதிர்ப்பு

(கொழும்பு விசேட நிருபர்)

வடமாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தை இணைப்பது தொடர்பாக கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதை தமிழ்க்கட்சிகள் கூட்டாக எதிர்த்துள்ளன.

இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு "இடைக்கால நிர்வாக சபை" ஒன்றை அமைப்பதற்கு அரசும ஐக்கிய தேசியக் கடசியும் இணங்கியிருப்பதை இந்திய அரசிற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா அறிவித்துள்ளார்.

உத்தேச அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்தில் அதிகாரப் பகிர்வு தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சீர்திருத்தங்களின் அடிப்படையில் கிழக்கு மாகாணம் வடமாகாணத்துடன் இணைய வேண்டுமா? என்பது தொடர்பாக கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தைத் தமிழ்க் கட்சிகள் எதிர்த்துள்ளன கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் கணிசமான அளவு குடியேற்றப்பட்டுள்ளதால் தமிழ் மக்கள் அங்கு சிறுபான்மையாக இருப்பதால் இவ்வாக்கெடுப்பு நடத்துவதில் அர்த்தமில்லை என தமிழ்க் கட்சிகள் கருத்து தெரிவித்துள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலர் பிரிவில் அமுல் படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 7.00 மணியிலிருந்து பிற்பகல் 5.00 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5 மணிக்குஊரடங்கு தளர்த்தபபட்டுமீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [ச ]

முக்கிய குறிப்பு:

உதவி மருத்துவர் பரீட்சையை முன்னிட்டு யாழ். பிரதேச செயலர் பிரிவில் ஊரடங்கு மாலை5மணி வரை தளர்த்தப்பட்டுள்ளது.

## இன்று பயணச்சீட்டு வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படவிருக்கும் ''சிற்றி ஒவ் றிங்கோ'' பயணிகள கபபலில் பயணம் செய்பவர்களுக்கான பயண அனுமதிச் சீட்டுக்கள் இன்று காலை 9.30 மணிக்கு வழங்கப்படும் என்று சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இக்கப்பலில் வெளிநாடு செல்பவர்களுக்கும் (பாஸ்போட் உள்ளவர்கள்) லங்கா முடித்த கப்பலில் பயணம் செய்வதற்கு முன்பு பயணச் சீட்டுக்கள் பெற்றவர்களுக்கும் இன்று முன்னுரிமை வழங்கப்படும் என்று சிவில் அலுவலகம் அறிவித்துள்ளது. (வ-ச)

## யாழில் விமானகுண்டுவீச்சை நிறுத்த அரசைஇந்தியா வற்புறுத்தவேண்டும்

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விமானக் குண்டுவீச்சு நடத்துவதை நிறுத்துவதற்கு இலங்கை அரசை இந்தியா வற்புறுத்த வேண்டும் என்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இக் கட்சியின் பொதுச் செயலாளர் குமரகுருபரன் கொழும்பில் உள்ள இந்தியத் தூதருக்கு அனுப்பிய கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு வந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கைச் சந்தித்து தமிழ் மக்கள் தொடர்பாகவும் இனப்பிரச்சினை தொடர்பாகவும் விளக்க விரும்பியிருந்தோம்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெயர்ந்து அல்லலுறும் மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இந்தியா தலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசிக் கட்டணத்தை தவணைதப்பாது செலுத்தவும்

### ரெலிக்கொம் நிறுவனம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தொலைபேசி இணைப்புப்பெற்ற வாடிக்கையாளர்கள் ரெலிக்கொம் நிறுவனத்திற்கு மாதந்தோறும் செலுத்தவேண்டிய கட்டணத்தொகையைத் தவணைதப்பாது செலுத்தித் தொலைபேசிச் சேவையை சீராக்குவதற்கும் விஸ்தரிப்பதற்கும் ஒத்துழைப்பு நல்குமாறு யாழ். ரெலிக்கொம் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களைக் கேட்டுள்ளது.

ரெலிக்கொம் நிறுவனம் தனது வேண்டுகோளில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் வந்தது

(யாழ்ப்பாணம்)

திருமலையிலிருந்து 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் 400 பயணிகளுடன் நேற்றுக் காலை 8-45 மணியளவில் பருத்தித்துறையைவந்தடைந்தது.

இதேவேளையில் பருத்தித் துறையில் தற்போது தரித்து நிற்கும் 'இந்துருவலி' கப்ப

(4 ஆம் பக்கம் பார்க்க)

★ அடுத்த வாரம் முதல் தனியார்

## எரிபொருள் விற்பனை முகவர்களுக்கு பெற்றோல், டீசல் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தனியார் முகவர்களுக்கு பெற்றோல், டீசல் என்பன அடுத்த வாரமளவில் வழங்கப்படவுள்ளது.

எரிபொருள் விநியோகம் தொடர்பாக நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் க,சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே தனியார் முகவர்களுக்கு பெற்றோல், டீசல் வழங்கப்படுவதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை எரிபொருள் களஞ்சியத்தில் போதியளவு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று பிள்ளைகளின் தாய் மண்ணெண்ணை ஊற்றி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் மண்ணெண்ணை ஊற்றி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று புங்குடுதீவில் கடந்த இரண்டாம் திகதி இடம்பெற்றுள்ளது.

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பாலேந்திரன் ஜெயந்தி என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

மரண விசாரணையின் பின்னர் சடலம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (க

## தொலைபேசிக் கட்டணம் செலுத்தாத இணைப்புக்கள் துண்டிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கும் வெளியிடங்களுக்குமான தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதை அடுத்து பெருந்தொகையான வாடிக்கையாளர்கள் செலுத்த வேண்டிய தொலைபேசிக் கட்டணத்தை உரிய காலத்தில் செலுத்த தவறியமையால் கோடிக்கணக்கான ரூபா நிலுவையாக இருப்பதாக ரெலிக்கொம் அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நிலுவையாக உள்ள தொலைபேசிக் கட்ட

[ 4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் டீசல்விலை உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 24ரூபா 55சதமாக இருந்த டீசலின் விலை தற்போது 27ரூபா 85 சதமாக 3ரூபா 30சதத்தால் அதிகரித்துள்ளது என்று வட பிராந்திய பெற்றோலியக் கூட்டுத் தாபனம் தெரிவித்துள்ளது. (ச)

## ஆகஸ்ட்டுக்கு முன் தணிக்கை நீக்கப்படும்

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பத்திரிகைச் செய்தித்தணிக்கை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதிக்கு முன் நீக்கப்படும் என்று தபால் தொலைத்தொடர்புகள் தொடர்புசாதன அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசுகையிலே

[4ஆம் பக்கம்பார்க்க]

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஆங்கிலம் விசேடமாக

O/L Distinction, Credit ஆண்டு 6-10 வரை G A Q. A/L 2001-02, (கணிதம் O/L உட்பட) கற்பிக்கப்படும். B.Sc (Cey) 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் பின்புறம், திருநெல்வேலி. [1055]

## தவறிவிட்டது

சின்னத்துரை நவமணி என்பவரின் விசேட அடையாள அட்டை இல. 09103302[illegible] தேசிய அடையாள அட்டை இல. 547803370V மந்துவில் வடக்கு, கொடிகாமம். மானிப்பாய்க்கும் உடுவிலுக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். மணி தேநீர்க்கடை, ஆனைக்கோட்டைச் சந்தி. [1048]

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி [Broilers] விற்பனைக்கு உண்டு. சனி ஞாயிறு தினங்களில் மட்டும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கோல்டன் பாம் சென்ரர், 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (1041)

## இறைச்சிக்கோழி விற்பனை

Broilers, Cullbirds, Cockerels இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து [பாதிக் கோழி உட்பட] தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு] முத்திரைச் சந்தையடி, நல்லூர். [953]

## ஆங்கிலம்

O/L 2000-ம் ஆண்டு எடுக்கும் மாணவர்களுக்கும், மற்றும் கீழ்வகுப்புகளுக்கும், வீட்டுக்கு வந்து ஆங்கிலம் கற்பித்துக் கொடுக்கப்படும்.

யாழ். நகர், நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் உட்பட்ட இடங்கள் விரும்பத்தக்கது. உடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

இல. 102, C/o, வலம்புரி. (1067)

## விற்பனைக்கு

புதிய CD படங்களைக் கொண்ட வீடியோக்கொப்பிகள், சிங்கர் தையல் மெசின் மற்றும் வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மு. தேவராசா தொட்டிலடிச் சந்தி, சங்கானை. (கி-515)

## திறப்பு விழா

(ஆவரங்கால்)

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய புதிய கட்டிடத் தொகுதி திறப்பு விழா இன்று 18 ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளதாக மேற்படி பாடசாலை அதிபர் எஸ். முத்துக்குமாரசாமி தெரிவித்துள்ளார்.

50 இலட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக் கட்டிடத் தொகுதியில் செயற்பாட்டறை, விவசாய அலகு, போன்றன அமைக்கப்பட்டுள்ளன. (க-57)

## கண்டெடுக்கப்பட்டது

552500962V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை புத்தூர்ச் சந்தி சோதனைச் சாவடிக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். [கி-57]

## எமது வாடிக்கையாளர் கவனத்திற்கு

181, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிய

### வைற் ஹவுஸ் அந்திய கால சேவை (WAITE HOUSE FUNERAL SERVICE)

தற்காலிகமாக ஆனைக்கோட்டை சந்திக்கு முன்பாக காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 7 மணி வரையும் பழைய இடத்தில் காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும் இயங்குகிறது. என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நிர்வாகத்தினர்

(1012)

## தற்காலிக இடமாற்றம்

### ஜி. எஸ். லிங்கநாதன் அன்கோ. புடவை வியாபாரம்

சங்கானை பிரதான வீதியில் (தபால் கந்தோர் அருகாமையில்) தொடர்ந்து இயங்குகின்றது.

(868) ஜி. எஸ். லிங்கநாதன் அன்கோ.

## தற்காலிக இடமாற்றம்

### ரவி மோட்டோர்ஸ்

மேற்படி எமது ஸ்தாபனம் தற்போது தற்காலிகமாக (நாச்சிமார் கோவிலுக்கு அருகாமையில்) உள்ள இல. 99 சிவப்பிரகாசம் வீதியில் இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

| நிரந்தர முகவரி | தற்காலிக முகவரி |
| --- | --- |
| இல. 245, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | இல. 99, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். |

(1001)

## கண்ணீர் அஞ்சலி

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கோப்பாய் ஆசிரிய மாணவி

செல்வி ஜேம்ஸ் ஜெனற் ஜீவரோஜினி

அவர்களின் தந்தை

### திரு. அருளப்பு ஜேம்ஸ்

(உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு.)

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அன்னாருக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரிய மாணவர்கள்,
தமிழ்நெறி
(கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

(1065)

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில் 28 - 10 - 1946



அம்பாள் அடியில் 29 - 05 - 2000

அமரர்

### மார்க்கண்டு பரமேஸ்வரன்

[முகாமையாளர் அருள்மிகு ஸ்ரீ வராகி அம்பாள் ஆலயம் கொக்குவில் மேற்கு, முன்னாள் கப்பல் பொறியியலாளர், வராகி அம்பாள் றேடர்ஸ், K. K. S வீதி, உரிமையாளர்)

அருள்மிகு ஸ்ரீ வராகி அம்பாளின் தொண்டனாய் அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் இருந்து எமை விட்டுப் பிரிந்த எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மலர்வளையம் சாத்தியோர்க்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர்க்கும், பலவழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (18-06-2000) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11-00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசன வைபவத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
திருமதி. வசந்தகுமாரி பரமேஸ்வரன். (மனைவி)
திருமதி. இந்திராணி நல்லையா. (சகோதரி)
பிள்ளைகள்.

'வெண்மதி'
ஆனைக்கோட்டை.
(1027)

## முக்கிய அறிவித்தல்

### ரவிதரன் சவர்க்காரத் தொழிற்சாலை

114, [illegible]ச்சேரி நல்லூர் வீதியில் இயங்கி வந்த ஸ்தாபனம் அதே வீதியில் 146-ம், இலக்கத்தில் இயங்குகிறது. என வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். சந்திக்கும் நேரம் காலை 9 மணி தொடக்கம் மாலை 2 மணி வரையும் என்பதை அறியத் தருகிறோம்.

(998) உரிமையாளர்: ச. ரவி

## DCS

### College of Computer Technology

எமது நிறுவனத்தின் வடமராட்சிக் கிளையின் சகல விரிவுரைகளும் 21.06.2000 புதன்கிழமை காலை 8·00 மணிக்கு ஆரம்பமாகும். அத்துடன் யாழ். நிலையத்தின் விரிவுரைகள் 17.06.2000 ல் இருந்து நடைபெறுகின்றன. என்பதனை சகல மாணவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

Director (Ad)

DCS
124/2palaly Road,
Thirunelvely.

(1069)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சிவானந்தம் சாந்தினி அவர்கள்

கலைப்பீட 3ம் வருட பொருளியல் சிறப்புக்கலை மாணவன் இ. சண்முகதாஸ் அவர்களின் அன்புத் தங்கை திருமதி சிவானந்தம் சாந்தினி அவர்கள் 12-06-2000 (திங்கள்) அன்று இறைபதமடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

3ம் வருட மாணவர்கள்
யாழ். பல்கலைக்கழகம், கலைப்பீடம்,
யாழ்ப்பாணம்.
(C 518)

# மரண அறிவித்தல்கள்

## திரு. ஆறுமுகம் குமரகுரு

(இளைப்பாறிய அதிபர்)

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் குமரகுரு அவர்கள் 16.06.2000 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் சாந்தநாயகியின் அன்புக் கணவரும் கணேசநாதன் (பிரான்ஸ்), யசோ, ஆறுமுகம் (காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வவுனியா) அவர்களின் அன்புத் தந்தையும், திரு. வி. சண்முகநாதன் (உதவிடிப்போ அதிகாரி, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சீனன்குடா) அவர்களின் அன்பு மாமனாரும், திருமதி ஞானாம்பிகை, திரு. செந்திநாதன் (மாகாண விவசாயப் பணிப்பாளர், திருகோணமலை) ஆகியோரின் சகோதரரும், கஜானன், வைஷாலினியின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18.06.2000 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணியளவில் இடம்பெற்று அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு, தகவல் - இ. விவேகானந்தன்.
அச்சுவேலி. (மைத்துனர்)
(1072)

## வேலாயுதம் வல்லிபுரம்

(யாழ். தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூ. ச. நிர்வாகசபை உறுப்பினர்)

பூநகரியைப் பிறப்பிடமாகவும் கற்குளம் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் வல்லிபுரம் 17 - 6 - 2000 [நேற்று] காலமானார். இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், புஸ்பராணி, காலஞ்சென்ற ஸ்ரீக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 18 - 6 - 2000 இன்று (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10-00 மணியளவில் நடைபெற்று வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீனிவாசகம் வீதி, கொட்டடி.
தகவல்:- மு. இராஜநாயகம். (மருமகன்)
(1066)

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல் நோக்கி வாழும் குடி.
- குறள்

# வலம்புரி

## சொல்லும் செயலும்

சொல்லிலே அர்த்தமில்லாத போக்கினால் அரசியல் இந்த அவல நிலைக்கு ஆளாகியது. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பது இளங்கோவடிகளின் வாதம்.

இந்த நாட்டிலே உரிமைப் போராட்டங்கள் கிளர்ந்து எழுந்த வேளைகளில் அடக்கு முறைகள் கையாளப்பட்டன. புரிந்துணர்வும் உள்ளத்தெளிவும் எழுந்திருக்குமானால் இன்றைய அவல நிலைக்கு தள்ளப்பட்டிருக்க மாட்டாது.

குட்டக் குட்டக் குனிபவன் மடையன். குனியக் குனியக் குட்டுபவனும் மடையன். அத்தகையதொரு தேக்கநிலை-சூன்ய நிலை தமிழர் தம் கோரிக்கைக்கு கடந்த காலங்களில் தலை காட்டியது.

அன்றைய அரசியல்வாதிகளின் அசண்டையீனங்களும், சுயநலப் போக்கும் தமிழர் வாழ்வை வெகுவாகப் பாதித்துவிட்டது. காற்றுள்ள போதே தூற்றத் தவறிய தமிழ்த் தலைவர்களால் விளைந்ததே இன்றைய வினை. அறுக்கமாட்டாதவன் இடுப்பில் ... மழு மட்டை என்பார்கள். தீர்க்க தரிசனத்தோடு தமிழன் அரசியல் ஸ்திரத்தைப் பேணத் தவறிவிட்டார்கள். ஒரு காலத்தில் பெரும்பான்மையினரின் தானைத் தலைவர்களாக இருந்தவர்களே போற்றுதலிலும் பாராட்டிலும் மயங்கிக் கிடந்தார்கள்.

அடுத்து வந்த காலப் பகுதியில் தம்முள்ளே சண்டையிட்டுக் கொண்டார்கள். பலம் பேச நெல்லிக்காய் மூட்டை போலானார்கள். அத்தகையதொரு சூழ்நிலை காலத்துக்குக்காலம் பிரித்தாளவும், ஏமாற்றவும் ஏதுவாக அமைந்தன. எத்தனை ஒப்பந்தங்கள் கருவிலே சிதைந்தன. அந்த நிகழ்வுகளினால் சூடு கண்ட பூனை போல் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நாடும் தேவையும் ஆயிற்று. உள்ளத் தெளிவுடன் கள்ளத்தனம் இம்மியும் இல்லாத நிலையிலேயே காரியமாகும்.

வரலாற்றுப் பின்னணியை நன்கு புரிந்து கொண்டு, தமிழினம் உரிமைப் போராட்டத்திற்குக் கொடுத்த விலைகளைக் கவனத்திற் கொண்டு நிரந்தரமான நிம்மதியை விரைவில் உருவாக்க வேண்டும். நாட்டின் செழுமை கலைந்து சுடுகாடாக முன் சமாதான முயற்சிகள் வெற்றி பெறவேண்டும்.

- அன்புடன் ஆசிரியர்

# ஆயுதம் தரித்தோர் வெறியாட்டம்

# 33 இந்துக்கள் துடி துடித்துப்பலி

## பீகாரில் சம்பவம்

(லக்னோ)

பீகாரில் நேற்று முன்தினம் இரவு ஆயுதம் தாங்கியோர் நடாத்திய வெறியாட்டத்தில் 33 இந்துக்கள் துடிதுடிக்கப் படுகொலை செய்யப்பட்டனர். 15பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் வரிசையாக நிற்க வைத்து கண்மூடித்தனமாக சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் ரண்வீர் சேனா என்ற இயக்கத்தினர் இப்படுகொலையைப் புரிந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்படுகொலைக்கான காரணம் எதுவும் இதுவரையில் தெரிவிக்கப்படவில்லை.

(க)

## ஊழியர்கள் பணியாற்ற வேண்டுகோள்

[மானிப்பாய்]

தென்மராட்சிபிரதேச செயலக உத்தியோகத்தர்களை அவர்கள் தங்கியிருக்கும் பிரிவுகளிலுள்ள பிரதேச செயலகங்களில் தற்காலிகமாக பணியாற்றுவதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் இவர்கள் கோப்பாய், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், நல்லூர், பருத்தித்துறை, உடுவில், கரவெட்டி, சங்கானை ஆகிய பிரதேச செயலகங்களுடன் இணைந்து இடம் பெயர்ந்த மக்களின் நலன்களைக் கவனிப்பார்களென்று தெரிவிக்கப்படுறது.

(க-120)

## "அருந்தவச் சந்தந்தோனியாரே! ஞான மருந்து தந்தெமை ஆதரிப்பீர்!"

தேனினு நெய்யான மெய்ஞானமா மறையை
தெளிந்த நீரோனை
மீன்கள் செவிகுளிர மொழிந்த தய்யா!
ஆனிமாதம் அந்தோனியார்; ஆனிப்பொன்திருமேனி
அவனி எழுந்து மின்ன
நானிலம் நல் இன்பப்புனல் பூசிந்துதையா! கவரி
மானினத்து மாமுனியே! மா (ஆ) தவனே!
மானிப்பாலொளி தரும் மாணிக்கமே!
வானுயரும் பெருவாழ்வை; பிள்ளைகள் எமக்கே;
வரமாரியாக வள்ளல் நீர் கொட்டுமையா!

முகமாலை: தே. ச. வில்சன்

18.06 2000: இன்று மானிப்பாய் புனித அந்தோனியார் திருநாளை இட்டு இக்கவிதை வெளியிடப்படுகின்றது.

## பதற்ற நிலையை பயன்படுத்தி அச்சுவேலி பஸ் நிலையத்தில் திருட்டு

அச்சுவேலி பஸ் நிலையப் பகுதியில் கடந்த 14 ஆந்திகதி இடம்பெற்ற பதற்ற சூழ்நிலையை பயன்படுத்தி திருடர்கோஷ்டி ஒன்று 50ஆயிரம் ரூபா பணத்தை திருடியுள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் அன்றைய தினம் தேநீர்க்கடை ஒன்றில் 8 பவுண்கொண்ட தாலிக்கொடி ஒன்றும் திருட்டுப்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவிடயம் தொடர்பாக அச்சுவேலியில் செயற்படும் ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(க-57)

## நூல் வெளியீடு

(புலோலி)

பருத்தித்துறை கலைஞர் வட்ட வெளியீடான "இளமையின் இரகசியம்" (உடற்கட்டழகுக் கலை) நூல் வெளியீட்டுவிழா இன்று 18ம் திகதி வட இந்து மகளிர் கல்லூரியில் யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி திரு. எம். நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெறுகின்றது. பிரமுகர்கள் பலர் இவ்விழாவில் கலந்து கொள்வர்.

(க-52)

## வடபகுதி பயணிகள் சேவையை சிறப்பாக நடாத்த தீவிர முயற்சி

### அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதிக்கான பயணிகள் சேவையை சிறப்பாக நடாத்துவது குறித்து வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு ஆராய்ந்து வருவதாக அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளனார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; கப்பல் போக்குவரத்தில் ஏற்படும் சிக்கல்கள் நிவர்த்தி செய்யப்பட்டு பயணம் இடையூறின்றி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் "திருமலைநகர்," பயணிகள் கப்பல் சேவை தற்போது இடம்பெற்று வருவதாகவும் இச்சேவை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் புனர்வாழ்வுப் பகுதிமேலும் தெரிவித்துள்ளது.

(க)

## தரம் 08 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு புலமைப் பரிசில் திட்டம்

(இணுவில்)

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் பாடசாலைகளில் தரம் 8 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு புலமைப் பரிசில் திட்டம் அறிமுகப் படுத்தப்பட உள்ளது.

மேலும் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற வசதி குறைந்த மாணவர்களுக்கு குறிப்பாக மாதம்2 ஆயிரம் ரூபாவிற்கு குறைவான வருமானம் பெறுகின்ற குடும்பத்தை சேர்ந்த மாணவர்களுக்கு மாதம் 250 ரூபாவீதம் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது.

இது சம்பந்தமான மேலதிக தகவல்கள் விரைவில் அனுப்பப்படும் எனவும் சம்பந்தப்பட்டவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(க-49)


### தேடுகின்றோம்

சாவகச்சேரி சிவன்கோவிலடியைச் சேர்ந்த
மு. பரமநாதன் அவர்களை
(சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்)
சாவகச்சேரி இலங்கை வங்கியில் கடமையாற்றும்
சி. பரமநாதன் தேடுகின்றார்.

சி. பரமநாதன்
C/o து. சிவயோகலிங்கம்
மருதடி உப தபாற்கந்தோர்,
பருத்தித்துறை.

(கி/ 516)



### பரி பேதுரு மெதடிஸ்த பாலர் பாடசாலை

றிம்மர் மண்டபம்
9, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

மேற்கூறிய பாலர் பாடசாலை மேற்கூறிய விலாசத்தில் நாளை திங்கள் 19 - 06 - 2000 தொடக்கம் தொடர்ந்து செயற்படும் என அறியத்தருகிறோம்.

நேரம் காலை 9. 00—11. 30

(1070) நிர்வாகம்.



### உடன் தொடர்பு கொள்ளவும்

பின்வருவோரை உடனடியாக உளநல சங்க செயலாளரை மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழையில் சந்திக்குமாறு வேண்டுகின்றோம்.

செல்வி கந்தவனம் செல்வராணி
கல்வயல் றோட், மடத்தடி சந்தி,
சாவகச்சேரி.

செல்வி கார்த்திகேசு செல்வராணி
தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி.
or
சைவச்சிறுவர் இல்லம், இந்துசமயப் பேரவை.
கைதடி

(1079) -செயலாளர்



### தற்காலிக இடமாற்றம்

### ராசி சில்க்ஸ்

### நல்லி சில்க்ஸ்

யாழ். நகரில் இயங்கி வந்த மேற்படி ஸ்தாபனங்கள் இரண்டும் வாடிக்கையாளரின் நன்மை கருதி தற்போது மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாகவும் (தயாளன் வீடியோ சென்ரர்) சங்கானை பிரதேச செயலகம் முன்பாகவும் இயங்கி வருகின்றது.

சகல விதமான புடவைத் திணிசுகளும், முகூர்த்தப் புடவைகளும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நம்பிக்கையுடன் நாடுங்கள்:-

ராசி சில்க்ஸ் & நல்லி சில்க்ஸ்
மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக,
யாழ். வீதி, மானிப்பாய்.

ராசி சில்க்ஸ் & நல்லி சில்க்ஸ்.
பிரதேச செயலகம் முன்பாக,
சங்கானை.

(1073)



### தற்காலிக இடமாற்றம்

### வீடியோ எக்கணமி மியூசிக் கோணர்

297, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி.

தற்காலிகமாக எமது ஸ்தாபனம்
சங்கானை - மாக்கற்
(உட்புறமாக)
இயங்கி வருகின்றது என்பதை
எமது வாடிக்கையாளர்களுக்கு
அறியத் தருகின்றோம்.

[1074]

### கூட்டுறவுச் சங்கங்களுக்கு

# 15தினங்களுக்குள் 4,63,800லீற்றர்

# எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் எரிபொருள் விநியோகிக்கும் புதிய நடைமுறை அமுலுக்கு கொண்டு வரப்பட்டபின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இம் மாதம் முதலாம் திகதியில் இருந்து பதினைந்தாம் திகதி வரை நாலுலட்சத்து 63 ஆயிரத்து 800 லீற்றர் எரிபொருள் வழங்கபபட்டுள்ளதாக வட பிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பெறறோல் 75 ஆயிரம் லீற்றர், மண்ணெண்ணை இரண்டுலட்சத்து70ஆயிரத்து 600 லீற்றர், டீசல் ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 200 லீற்றர் ஆகியன வழங்கப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன

ஆனால் இந்த அளவு எரிபொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட போதும் இவற்றில் பெரும் பகுதி இதுவரை மக்களைச் சென்றடையவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

## நாளை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்கள் கூட்டம நாளை காலை 10 மணிக்கு கூட்டுறவு அபிவிருத்தி தலைமையகத்தில் நடைபெறும்.

### ஆகஸ்ட்..

யேஅவா இவ்வாறு தெரிவித்தார்.

செய்தித் தணிக்கையால் மக்கள் மத்தியில் அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாடு மேலோங்கி வருவதாலேயே செய்தித் தணிக்கையை நீக்க முடிவெடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-ச)

### தொலைபேசிக் கட்டணந்

மேலும் தெரிவித்திருப்பதாவது;

தொலைபேசி இணைப்புப் பெற்றுள்ள வாடிக்கையாளர்களுக்கு மாதம், மாதம் அனுப்பி வைக்கப்படும் பற்றுசீட்டுக்குரிய தொகையை தவணைதப்பாது உடனுக்குடன் ரெலிக்கொம் நிறுவனத்தில் செலுத்தவேண்டும்.

பெப்ரவரி மாதத்திற்குரிய தொலைபேசிக் கட்டணப்பணத்தை ஏப்ரல் மாதத்திற்குள் கட்டிமுடிக்க வேண்டும் என்றும் ஏப்ரல் மாதத்திற்குள் கட்டணம் செலுத்தாதவர்களின் தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்படும் என்றும்,

வான் நுண்ணலைதொலைத் தொடர்பு சேவை உள்ளவர்கள் டிசம்பர் 99 தொடக்கம் இன்று வரை கட்டணம் செலுத்தி முடிக்காதவர்களுக்கு யூலை மாதம் தொலைபேசி இணைப்பு வழங்கப்படும்போது தொலைபேசி இணைப்பு வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### தொலைபேசி.-.

ணத்தை செலுத்தத் தவறும் வாடிக்கையாளர்களது தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்படும் என்றும் வான்நுண் அலைமூலமான தொலைபேசி இணைப்பு பெற்றவர்களே அதிகம் பணம் கட்டவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (வ)

### பயணிகள்...

வில் புகையிலை, தெங்கு பனம் உற்பத்திப் பொருட்கள் ஏற்றப்பட்டுக்கொண்டு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குமண கப்பல் பருத்தித்துறையில் பொருட்களை இறக்கியபின்னர் காங்கேசன்துறைக்கு நேற்று புறப்பட்டது. (க-12-52)

### யாழில் - - -

யிட்டு உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவித்து மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்த உதவியுடன் விடுதலைப் புலிகளோடு பேச்சுநடத்த இந்தியா வற்புறுத்த வேண்டும் என்றும் அவர் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார், (வ-ச)

### எரிபொருள்..-

எரிபொருள் இருந்த போதும் இவற்றை காங்கேசன்துறையில் இருந்து எடுத்து வர போதியளவு பவுசர்கள் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒரு சில வாரங்களாக தனியார் எரிபொருள் விற்பனை முகவர்களுக்கு எரிபொருள் விநியோகம் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

### வடக்கு.-..

ளன.

வடக்குக்கிழக்கு இணைப்பு தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது பற்றி ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கருத்து வெளியிடுகையில்இது தொடர்பாக தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாட்டைப்பொறுத்தே முடிவு செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாணசபைக்கு தேர்தல் நடத்தப்படும் வரை இடைக்கால நிர்வாக சபை அமைப்பதற்கு ஐக்கியதேசியக்கட்சியும் இணங்கி இருப்பதை அடுத்து இவ்விடயம் தொடர்பாகவும் அரசியல் அமைப்பு சீர்திருத்தம் சம்பந்தமாக கண்டுள்ள இணக்கம் பற்றியும் இந்திய அரசுக்கும் மற்றும் நோர்வே பிரிட்டன் அமெரிக்க நாட்டு அரசுகளுக்கும் இலங்கை அரசு அறிவித்துள்ளது. (வ)

## மரண அறிவித்தல்கள்

### ஆழ்வாப்பிள்ளை சிற்சபேசன்

(முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

கரணவாயைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாபிள்ளை சிற்சபேசன் 17-06-2000 நேற்று சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கென்றி ஆழ்வாப்பிள்ளை பார்வதி தம்பதியினரின் புதல்வனும், நவேந்தினராணியின் பாசமிகு கணவரும், செந்தூரன் (மருத்துவ பீடம், பாகிஸ்தான்), ஐங்கரன் (பொறியியல், பீடம், மொறட்டுவ) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவதாசன், சிற்றம்பலம் மற்றும் சறோயினிதேவி காலஞ்சென்ற டாக்டர் சிவசிதம்பரம், சரஸ்வதிதேவி ஆகியோரின் சகோதரரும் நாகபூசனி, சிவலிங்கம், நவபுஸ்பம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 18-06-2000 மாலை 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள்.

உடுவில் மேற்கு,
சுன்னாகம். (சி/517)

### சதாசிவம் சிவப்பிரகாசம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாக கொண்ட சதாசிவம் சிவப்பிரகாசம் (17-06-2000 சனிக்கிழமை) நேற்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சதாசிவம் தையலம்மையின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற இலட்சுமிப் பிள்ளையின் அன்புக் கணவருமாவார், சாம்பசிவம், சிறிகாந்தன், ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தியின் பாசமிகு மாமனாரும், சாந்தரூபன், சாந்தரூபி, வசந்தரூபன், வசந்தரூபி, ஆனந்தரூபி, சியாமிளா, சிந்துயா, தனுசா ஆகியோரின் அன்புப் பேரனும், சோமசுந்தரம், செல்லத்துரை, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார் காலஞ்சென்ற மயில்வாகனம் ஆச்சிமுத்துவின் மருமகனும் இராசரெத்தினம், இரெத்தினசபாபதி காலஞ்சென்ற கனகரெட்ணம், ஞானேஸ்வரி காலஞ்சென்ற நீலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், திருமதி இரெத்தினசபாபதி திருமதி கனகரெட்னம், கனேசலிங்கம், அம்பிகாவதி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18-06-2000 இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக அம்பலவி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்
சி.சாம்பசிவம்
[மகன்]

7ம் வட்டாரம்
வேலணை மேற்கு வேலணை [107 8


## ஸ்ரீசெல்வா

யாழ்ப்பாணம்

அஜித். சிம்ரன் நடித்த

உன்னைக்கொடு என்னைத்தருவேன்

CD பிரதி

10.00, 1.00[ப.நே)

(கி-499)

## லஷ்சுமி

இணுவில்

அஜித், சிம்ரான் நடித்த

உன்னைக்கொடு என்னைத்தருவேன்

(புதிய வெளியீடு)

10.30, 2.30 [ப.நே]

(கி/506)

## நாகம்ஸ்

சுன்னாகம்

கார்த்திக், ரோஜா, அஜித் நடித்த

இனிய பாடல்கள்நிறைந்த

உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்

(றீல்ஸ்)

11.00, 2.30 [பு.நே]

(கி/492)

விற்பனைக்கு

20 அங்குல கட்டிங் மெஷின் கத்தி விற்பனைக்கு உண்டு.

தேவி அச்சகம்

(தேவி அச்சக ஒழுங்கை)

யாழ்ப்பாணம்.

போன்: 2789 (933)


## மரண அறிவித்தல்கள்

### டாக்டர் சின்னத்தம்பி நவரத்தினம்

இல 220 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர், சின்னத்தம்பி - நவரத்தினம் அவர்கள் 17-06-2000 நேற்று சிவபதமடைந்துவிட்டார் இவர் காலம் சென்ற திரு. இருமதி சின்னத்தம்பி அன்னம்மா அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், காலம் சென்ற செல்வபாக்கியம், யோகவதி ஆகியோரின் அன்புக்கணவரும், காலம்சென்றவர்களான, துரைரத்தினம், இராசரத்தினம், மகேஸ்வரி மற்றும் பேபி - நல்லம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சத்தியேந்திரா, (கொழும்பு), காலம் சென்ற பாலேந்திரா, விஜயலக்சுமி (லண்டன்) யோகேந்திரா (லண்டன்), பத்தியேந்திரா (லண்டன்) இந்திரராஜ் (லண்டன்), மனோரதி, இரவீந்திரா (பாதுகாப்புப் பரிசோதகர்-யாழ் பல்கலைக்கழகம்), குமுதினிச் சந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் - மகேஸ்வரன் (லண்டன்), இரத்தினசிங்கம் (இல. வங்கி யாழ்ப்பாணம் 2ம் கிளை), சிவகுமார், பவளம் (கொழும்பு), செல்வநாயகி (திருமலை), நந்திகா (லண்டன்), ஷாமினி (லண்டன), பிரியா (லண்டன்), விமலறோஜினி, (மதனா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம் சென்ற (முதலியார்) காசிப்பிள்ளை, (டாக்டர்) பத்மாவதி, சிவனாதன் (அவுஸ்திரேலியா) கமலாவதி கந்தையா (அவுஸ்திரேலியா), ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். இறுதிக்கிரியைகள் 18-06-2000 அன்னாரின் இலலத்தில் நடைபெற்று பி. ப. இரண்டு மணிக்குத் தகனக் கிரியைகளுக்காகக் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக் கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்
ந. ரவீந்திரா (மகன்)
(பாதுகாப்பு பரிசோதகர் யாழ் பல்கலைக்கழகம்)

### அகஸ்தின் அனக்கிளற்

இல. 41, டேவிற் வீதி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், குளமங்கால் மல்லாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அகஸ்தின் அனக்கிளற் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) நேற்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலம் சென்ற அகஸ்தின், சிசிலியா ஆகியோரின் அன்பு மகனும், யூலியானாவின் அன்புக் கணவரும், திருமதி செலீன் ஜோண் குலசேகரம் (இத்தாலி), திருமதி ரோயிலின் ஞானதாசன் (ஆசிரியை நாரந்தனை றோ.க.ம.வி.), திருமதி ஜெலி புளோறன்ஸ் ஜொயில்ஸ் (இத்தாலி), அன்றூ சிறீதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி லியோரூபி, காலம் சென்ற அல்வினஸ், திருமதி இராஜேந்திரன், கிறேஸ் செல்வராணி, திருமதி சாள்ஸ் திரேசா ஜெலி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜோண்குலசேகரம் (இத்தாலி), ஞானதாசன் (ஓமான்), புலோறன்ஸ் ஜொயில்ஸ் (இத்தாலி) ஆகியோரின் அன்புமாமனும், ஜெனிபரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணி அளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
யூலியானா
(மனைவி) (சி519)

குளமங்கால்
மல்லாகம்

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் சேர ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.